வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press Release No: 7 date: 15.08.2021

## 75th Independence Day Celebrations in V.O.Chidambaranar Port Trust

The 75th Independence Day has been celebrated by V.O.Chidambaranar Port Trust in a grand manner at Port's School ground at 0900 hrs. on 15.08.2021

The celebrations to mark the 75th Independence Day of India commenced with the hoisting of the National Flag by Shri T.K. Ramachandran, IAS., Chairman,V.O. Chidambaranar Port Trust. Thereafter, he took salute from CISF.

Shri T.K. Ramachandran, IAS, Chairman, in his address, recalled the sacrifices made by our freedom fighters and expressed India's commitment to work towards realizing the objectives of 'Aatma Nirbhar Bharat', in making India self-reliant and a global hub of manufacturing and services.

He stated that in-spite of tough times faced by global maritime trade due to the rippling effect caused by Covid-19 pandemic in the form of shortage of containers, increase in ocean freight and drop in overall merchandise trade, VOC Port has handled 11.33 Million Tonnes and 2.68 TEUs of Containers during this financial year upto July 2021, registering a growth of 7.14 %, when compared to corresponding period of last year.

He also stated that VOC Port is proactively working towards achieving 'Aatma Nirbhar Bharat' initiatives of Government of India by promoting Port-led industries by implementing Tuticorin-SPEEDZ, an initiative providing 2000 acres of land for establishing Port base industries, Ease of Doing Business like Direct Port Entry and Direct Port Delivery of containers, infrastructure development by conversion of Berth No.9 as Container Terminal, Mechanisation of NCB-3 & widening of Port' Entrance channel and usage of Information Technology by facilitating 100% faceless online EXIM documents, assessment of charges, issue of licenses and payment gateway. The port has also set up a business development council.

He also stated that considering the increased handling of windmill blades, the Port has proposed to extend all support to this activity including allocation of additional land.

He highlighted the important CSR activities carried out by the port during this period, specially those related to COVID relief measures.

All the Officers and Staff who rendered meritorious service during this ongoing COVID-19 Pandemic were presented with certificates & awards. In view of the COVID-19 pandemic, preventive measures such as maintaining social distancing, wearing of masks and proper sanitization of the venue, as prescribed and recommended by the Ministry of Health & Family Welfare & such guidelines issued by the Ministry of Home Affairs, Government of India were strictly adhered during the entire event.

The above details were furnished in a Press Release by V. O. Chidambaranar Port Trust today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கைச் செய்தி எண் :7 தேதி : 15.08.2021

## வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 75வது சுதந்திரதின விழா கொண்டாட்டம்

இந்திய திருநாட்டின் 75வது சுதந்திர தின விழா, வ.உ.சிதம்பரனார் துறைமுகப் பொறுப்புக் கழகத்தில் 15.08.2021 இன்று துறைமுக பள்ளி மைதானத்தில் காலை 9.00 மணியளவில் கொண்டாடப்பட்டது.

திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் அவர்கள்,75வது சுதந்திர தினவிழாவை நினைவு கூறும் வகையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் அவர்கள், தனது சுதந்திரதின உரையில், நம்முடைய முன்னோர்கள் மற்றும் சுதந்திர போராட்ட தியாகிகள் தங்களுடைய இன்னுயிரைத் தியாகம் செய்து சுதந்திரம் பெற்று தந்ததை சுட்டிக்காட்டினார். மேலும் 'ஆத்மநிர்பார் பாரத்' (தற்சார்பு இந்தியா) திட்டத்தின் மூலம் உலகளவில் நிகழ்ந்து வரும் கடுமையான வர்த்தக போட்டியினை எதிர்கொள்ள உள்நாட்டு தயாரிப்புகளை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கிறது என்று கூறினார்.

தற்போது உலகெங்கும் நிலவி வரும் கொரோனா தொற்றின் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையால், குறைந்துள்ள வாணிபம், அதிகரித்துள்ள கப்பல் கட்டணம், சரக்குபெட்டகங்களின் தட்டுப்பாடு போன்ற பல்வேறு சூழ்நிலையிலும் இந்த நிதியாண்டின் ஜீலை மாதம் வரை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் 11.33 மில்லியன் டன் சரக்குகளையும் 2.68 இலட்சம் டிஇயு சரக்குபெட்டகங்களையும் கையாண்டு கடந்த நிதியாண்டை விட 7.14 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

மேலும் 'தற்சார்பு பாரதம்' (ஆத்ம நிர்பார் பாரத்) திட்டத்தினை செயல்படுத்துவதற்காக துறைமுகம் சார்ந்த தொழில் துவங்குவதற்கும் தற்சார்பு துறைமுக உள்கட்டமைப்புகளை நிறுவுவதற்கும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்று கூறினார். அதன்படி நமது துறைமுகம் 2000 ஏக்கர் நிலப்பரப்பினை துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகள் அமைவதற்காக ஒதுக்கியுள்ளது.துறைமுகத்தில் எளிமையான வாணிபம் நடைபெறுவதற்காக வசதியாக துறைமுகங்களுக்குள்நேரடியாக சரக்குபெட்டங்களை எடுத்து செல்லுதல் (Direct Port Entry) மற்றும் துறைமுகத்தில் இருந்து நேரடி சரக்குபெட்டக விநியோகம் (Direct Port Delivery) செயல்படுத்தி வருகிறது. துறைமுகத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு 9வது கப்பல் சரக்கு தளத்தினை சரக்குபெட்ட முனையமாக மாற்றுதல், வடக்கு சரக்குதளம் 3-ஐ இயந்திரமயமாக்கல் மற்றும் துறைமுக கப்பல் நுழையும் வழித்தடத்தினை அகலப்படுத்துதல் போன்ற திட்டங்கள் நடைபெற உள்ளது. மேன்மைபடுத்தப்பட்ட துறைமுக கணிணி செயலாக்கத்தின்(Port Community System) மூலம் 100சதவிகிதம் நேரடி தொடர்பு இல்லாமல் வர்த்தக ஆவணங்கள் சமர்பித்தல், கட்டணங்கள் செலுத்துதல் மற்றும் உரிமங்கள் வழங்குதல்போன்ற செயல்பாடுகளை செயல்படுத்தி வருகிறது என்று கூறினார். துறைமுக உபயோகிப்பாளர்களுடன் இணைந்து வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் மூலம் சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதியினை அதிகரிப்பதற்கு 'வர்த்தக மேம்பாட்டு சபையை' (Business development council) துறைமுகம் உருவாக்கியுள்ளது என்று கூறினார்.

நமது துறைமுகம் காற்றாலை இறகு மற்றும் அதன் உதிரிபாகங்கள் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டு வருவதினால், ஏற்றுமதிக்கு தயாராக உள்ள காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாகங்களை துறைமுகத்தினுள் (Customs bound area) சேமித்து வைப்பதற்காக நிலப்பரப்பு விரைவில் துறைமுக உபயோகிப்பாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது என்று கூறினார்.

மேலும் சமூக பெறுநிறுவன திட்டத்தின்கீழ் பல்வேறு நலத்திட்டங்களை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் செய்து வருகிறது, குறிப்பாக இந்த கொரோனா காலகட்டத்திற்கு தேவையான தடுப்பு நிவாரண நடவடிக்கைகளுக்கு தனது பங்களிப்பை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் அளித்து வருவதாக கூறினார்.

இவ்விழாவில் கொரோனா தொற்றின் போது துறைமுகத்தில் சிறப்பாக பணியாற்றிய துறைமுக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு சான்றிதழ்களும் மற்றும் விருதுகளும் வழங்கப்பட்டது. மத்திய உள்நாட்டு விவகாரங்கள் அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி மத்திய ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலவாழ்வு அமைச்சகத்தின் வெளியிட்டுள்ள வழிகாட்டுதலை பின்பற்றி இவ்விழாவில் பங்கேற்ற அனைவரும் முககவசம் அணிந்து, சமூக இடைவெளி கடைபிடித்து மற்றும் கிருமிநாசினி தெளிக்கப்பட்டு போன்ற அனைத்து பிரத்தியோக நிலையான செயல்பாடுகளும் கடைபிடித்தனர்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது

மக்கள் தொடர்பு அதிகாரி